## 11-ஆம் வகுப்பு

# கணக்குப்பதிவியல்

## தமிழ்வழி சிறப்புக் கையேடு 2024-25

## கிருஷ்ணகிரி மாவட்டம்

**தலைமை**

**திருமதி. க.பெ. மகேஸ்வரி அவர்கள்**
இணை இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை.

**திரு. முனிராஜ் அவர்கள்**
முதன்மைக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. நா. ராஜன், மாவட்ட கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி.
திரு. ஆர்.வி.இரமாவதி மாவட்ட கல்வி அலுவலர், ஓசூர்.
முனைவர்.மு.வெங்கடேசன் முதன்மைக் கல்வி அலுவலர் நேர்முக உதவியாளர் (மே.நி.க) கிருஷ்ணகிரி மாவட்டம்.
திரு.எஸ்.வடிவேல்,உதவி திட்ட அலுவலர்(முகஅ)கிருஷ்ணகிரி மாவட்டம்.
முனைவர். பொ.ஜெ.முரளி, தலைமை ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, பாரூர்.
திரு.ச.ஜான் பாக்கியம், உதவி தலைமை ஆசிரியர், நடுநிலைப்பள்ளி, இராசு வீதி கிருஷ்ணகிரி.

பாட ஆசிரியர்கள் குழு

திரு.கோ.முருகன், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஊத்தங்கரை.
திரு.செ.பழனி, அரசு மேல்நிலைப்பள்ளி, கண்ணன்டஹள்ளி.
திரு.வேடியப்பன், அரசு மேல்நிலைப்பள்ளி, பாவக்கல்.
திரு.இரா.செந்தில்நாதன்,அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, போச்சம்பள்ளி.
திருமதி.ப.சக்திவேணி, அரசு மேல்நிலைப்பள்ளி, நெடுங்கல்.
திரு.இல.பன்னீர்செல்வம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சந்தூர்.
திரு.கோ.கோபு, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சூளகிரி.

# மேல்நிலை முதலாம் ஆண்டு
# கணக்குப்பதிவியல்

**1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது**

அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்

இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

**2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது**

அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்

ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்

இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்

ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

**3. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம்பெறாது.**

அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்

இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

**4. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது**

அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலைக் குறிப்பு ஈ) பேரேடு

**5. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?**

அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

**6. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து**

அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து

இ) வணிகத்தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத்தன்மை கருத்து

**7. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது**

அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து

இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

**8. GAAP என்பது:**

அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**9. இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு**

அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து

இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

**10. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு**

அ) இந்திய மைய வங்கி

ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

இ) உச்ச நீதி மன்றம்

ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

**11. கணக்கியல் சமன்பாடு குறிப்பது**

அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

**12. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை...**

அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்

ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்

இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்

ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

**13. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹ 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல்______**

அ) ₹ 1,60,000 ஆ) ₹ 60,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹ 40,000

**14. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது**

அ) சொத்துக்கள் =பொறுப்புகள்+முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

இ) பொறுப்புகள் =சொத்துக்கள்+முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்

**15. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?**

அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை

இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை

**16. சொத்து கணக்கு கையாள்வது**

அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்

இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

**17. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?**

அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு

இ) மகேஷ் கணக்கு ஈ) பாலன் நிறுவனம்

**18. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு**

அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு

இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

**19. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு**

அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

**20. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது**

அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்
ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்
இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில்
ஈ) குறைந்த பட்சம் மூன்று கணக்குகள்

**21. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்**

அ) நிதி நிலைமையை அறிய
ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய.

**22. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.**

அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

**23. கு.ப.எ. என்பது**

அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்

**24. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்.**

அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

**25. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்**

அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

**26. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது**

அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

**27. இருப்பாய்வு என்பது ஒரு**

அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு

**28. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது**

அ) வியாபாரக் கணக்கு ஆ) இருப்பாய்வு இ) குறிப்பேடு ஈ) இலாபநட்டக் கணக்கு

**29. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?**

அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்

இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

**30. கீழ்கண்டவற்றில் எது / எவை இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்களாகும்.**

அ) அனைத்து பேரேட்டுக் கணக்குகளின் சுருக்கத்தைத் தருவது.

ஆ) இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க உதவுவது

இ) கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையைப் பரிசோதிப்பது

ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

**31. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்**

அ) குறிப்பேடு ஆ) நாளேடு இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலைக் குறிப்பு

**32. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?**

அ) இருப்பு முறை ஆ) மொத்தத் தொகை முறை

இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

**33. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ₹ 200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?**

அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார்

ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்

இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

ஈ) ஏதேனும் வரவு இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

**34. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?**

அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு

**35. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு**

அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு

இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

**36. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது**

அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்

இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

**37. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது**

அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்

ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்

இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்

ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

**38. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது**

அ) கொள்முதல் கணக்கின் பற்றுபக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்றுபக்கம்

இ) கொள்முதல் கணக்கின் வரவுப் பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவுப் பக்கம்

**39. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?**

அ) அனைத்து சரக்குகளின் விற்பனை

ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

**40. விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது**

அ) விற்பனை கணக்கு ஆ) ரொக்க கணக்கு

இ) கொள்முதல் கணக்கு ஈ) உரிய குறிப்பேடு

**41. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது**

அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்

இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**42. விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது**

அ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது

ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது

இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது

ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது

**43. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு**

அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு

இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

**44. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்**

அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது

**45. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல ?**

அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது

இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

ஈ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன.

**46. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்**

அ) ரொக்க ஏடு ஆ) பேரேடு இ) உரிய குறிப்பேடு ஈ) கொள்முதல் ஏடு

**47. ரொக்க ஏடு ஒரு**

அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு

இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

**48. ரொக்க ஏடு பதிவு செய்வது**

அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்

இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

**49. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?**

அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு

இ) பேரேட்டில் முதல் கணக்கு ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு

**50. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.**

அ) சாதாரண ரொக்க ஏடு ஆ) இருபத்தி ரொக்க ஏடு

இ) முப்பத்தி ரொக்க ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

**51. முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது**

அ) ரொக்கப்பத்தி பற்றுப்பக்கம் ஆ) ரொக்கப்பத்தி வரவுப்பக்கம்

இ) வங்கிப்பத்தி பற்றுப்பக்கம் ஈ) வங்கிப்பத்தி வரவுப்பக்கம்

**52. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?**

அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்

ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்

இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை

ஈ) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

**53. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது**

அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப் பதிவு இ) ஒற்றைப் பதிவு ஈ) சாதாரணப் பதிவு

**54. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு**

அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

**55. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?**

அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்
ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க
ஈ) மூலப் பொருட்கள் வாங்க

**56. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு**

அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
இ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

**57. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது.**

அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

**58. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது**

அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
ஈ) சில்லறை ரொக்க ஏடு

**59. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் பற்றிருப்பு என்பது**

அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு
இ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

**60. வங்கி அறிக்கை என்பது**

அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்
ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

**61. எந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.**

அ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப் பத்தியின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் படி வங்கிப் பத்தியின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
ஆ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப் பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படியான இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
இ) ரொக்க ஏட்டின் படி வங்கிப் பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படியான இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
ஈ) சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

**62. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது.**

அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்
ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்
ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

**63. பின்வருபவற்றில் எது வங்கிச் சரிகட்டும் பட்டியலின் சிறப்பியல்பு அல்ல.**

அ) காசோலை தீர்வடைவதில் ஏற்படும் கால தாமதத்தை சரிகட்டும் பட்டியல் காண்பிக்கும்

ஆ) சரிகட்டும் பட்டியல் கணக்காளர் ரொக்கத்தை கையாளும் போது செய்யக்கூடிய மோசடிகளை தடுக்கிறது

இ) வங்கி இருப்பின் உண்மையான நிலையை அறிய பயன்படுகிறது

ஈ) சரிகட்டும் பட்டியல் கணக்காண்டின் இறுதியில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது

**64. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹ 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?**

அ) ₹ 1,950 வரவு இருப்பு ஆ) ₹ 1,950 பற்று இருப்பு

இ) ₹ 2,050 பற்று இருப்பு ஈ) ₹ 2,050 வரவு இருப்பு

**65. வங்கி அறிக்கையின் படி இருப்பு ₹ 1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹ 2,000. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?**

அ) ₹ 3,000 மேல்வரைப்பற்று ஆ) ₹ 3,000 சாதகமான இருப்பு

இ) ₹ 1,000 மேல்வரைப்பற்று ஈ) ₹ 1,000 சாதகமான இருப்பு

**66. பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?**

அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது

ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை

ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

**67. விதிப்பிழை எழுவது**

அ) ஒரு நடவடிக்கை முழுவதும் விடுபடும்போது

ஆ) ஒரு நடவடிக்கை பகுதி விடுபடும்போது

இ) முதலினம் மற்றும் வருவாயினத்தை வேறுபடுத்தாத போது

ஈ) பேரேட்டில் தவறாக எடுத்து எழுதுதல் மற்றும் தவறாகக் கூட்டும்போது

**68. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்**

அ) விதிப்பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்

இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள் ஈ) பகுதி விடு பிழைகள்

**69. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது**

அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு

இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாப நட்டக் கணக்கிற்கு

**70. ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவுசெய்யப்படாத போது அது ______ எனப்படும்**

அ) விதிப் பிழை ஆ) முழுவிடு பிழை

இ) பகுதி விடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

**71. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்துப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது**

அ) பகுதி விடு பிழை　　ஆ) விதிப் பிழை

இ) முழு விடு பிழை　　ஈ) இருமுறை பதிந்த பிழை

**72. கீழ்க்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப் பாதிக்காது?**

அ) ஒரு கணக்கில் தவறாக இருப்புக் காட்டுதல்

ஆ) பேரேட்டில் எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்

இ) ஒரு கணக்கில் தவறாகக் கூட்டுதல்

ஈ) ஒரு பேரேட்டுக் கணக்கில் தவறான தொகையை முன்னெடுத்து எழுதுதல்

**73. செங்குட்டுவனால் சரக்கு திருப்பித் தரப்பட்டு சரக்கிருப்பில் சேர்க்கப்பட்டு ஆனால் ஏடுகளில் பதிவேதும் செய்யப்படவில்லை. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?**

அ) செங்குட்டுவன் கணக்கு　　ஆ) விற்பனைத் திருப்பக் கணக்கு

இ) வெளித் திருப்பக் கணக்கு　　ஈ) கொள்முதல் திருப்பக் கணக்கு

**74. அதியமானிடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும் போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?**

அ) கொள்முதல் கணக்கு　　ஆ) அதியமான் கணக்கு

இ) அறைகலன் கணக்கு　　ஈ) இவை ஏதுமில்லை

**75. கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?**

அ) கொள்முதல் கணக்கு　　ஆ) அனாமத்துக் கணக்கு

இ) கடனீந்தோர் கணக்கு　　ஈ) மேற்கண்டது ஏதும் இல்லை

**76. கீழ்க்கண்ட பிழைகளில் எந்தப்பிழை அனாமத்துக் கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?**

அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ஆ) நரேந்திரனால் சர க்கு திருப்பித் தரப்பட்டது, ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

இ) அகிலாவால் ₹ 900 மதிப்புள்ள சரக்கு திருப்பித் தரப்பட்டது, விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 90 என பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஈ) ரவிவர்மனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

**77. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது,**

அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்

ஆ) ஆண்டுதோறும் குறையும்

இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்

ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது

**78. தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்து செல் இருப்பு முறை

இ) ஆண்டுத் தொகை முறை ஈ) காப்பீட்டு முனைம முறை

**79. குறைந்து செல் மதிப்பு முறையில், தேய்மானத் தொகையானது**

அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்

ஆ) ஆண்டுதோறும் குறையும் இ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்

ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

**80. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?**

அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

**81. பின்வரும் எந்த சொத்துகளுக்கு வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது**

அ) பொறி மற்றும் பொறி இயந்திரம் ஆ) சுரங்கம் மற்றும் கற் சுரங்கங்கள்

இ) கட்டடங்கள் ஈ) வணிகக்குறி

**82. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?**

அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு

இ) தொழில்நுட்ப மாற்றங்கள் (ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

**83. சொத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் காலப்போக்கில் அதிகரிக்கும் போது பின்வரும் தேய்மான முறைகளுள் எது சிறந்தது?**

அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்து செல் இருப்பு முறை

இ) தேய்மான நிதி முறை ஈ) ஆண்டுத் தொகை முறை

**84. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ___________ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.**

அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை

**85. எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்**

அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல்

ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்

இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்

ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்

**86. தேய்மான விகிதமானது சமமாக இருக்கும் போது நேர்க்கோட்டு முறைப்படி உள்ள தேய்மானத் தொகை மற்றும் குறைந்து செல் இருப்பு முறையுடன் ஒப்பிடும் போது**

அ) எல்லா ஆண்டுகளிலும் சமமாக இருக்கும்.

ஆ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் அதிகமாகவும் இருக்கும்.

இ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் குறைவாகவும் இருக்கும்.

ஈ) முதலாண்டில் குறைவாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் சமமாகவும் இருக்கும்.

**87. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்**

அ) முதலினச் செலவு　　ஆ) வருவாயினச் செலவு

இ) நீள்பயன் வருவாயினச் செலவு　　ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

**88. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹ 20,000**

அ) தொடக்கச் செலவு　　ஆ) வருவாயினச் செலவு

இ) முதலினச் செலவு　　ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

**89. வங்கி வைப்புகள் மீதான வட்டி**

அ) முதலின வரவு　　ஆ) வருவாயின வரவு

இ) முதலினச் செலவு　　ஈ) வருவாயினச் செலவு

**90. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை**

அ) முதலினச் செலவுகள்　　ஆ) வருவாயினச் செலவுகள்

இ) வருவாயின வரவுகள்　　ஈ) முதலின வரவுகள்

**91. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது**

அ) கடந்த காலத்திற்கு　　ஆ) எதிர் காலத்திற்கு

இ) நடப்பு காலத்திற்கு　　ஈ) எந்த காலத்திற்கும்

**92. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்**

அ) வருவாயினச் செலவுகள்　　ஆ) முன் கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்

இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள்　　ஈ) முதலினச் செலவுகள்

**93. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர்______________**

அ) நிலையான சொத்து　　ஆ) நடப்புச் சொத்து

இ) கற்பனைச் சொத்து　　ஈ) புலனாகாச் சொத்து

**94. இருப்புநிலைக் குறிப்பு என்பது ___________**

அ) ஓர் கணக்கு　　ஆ) ஓர் அறிக்கை

இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை

ஈ) மேல் கூறியவற்றில் எதுவுமில்லை

**95. வணிகத்தின் நிகர இலாபம் ________ அதிகரிக்கும்**

அ) எடுப்புகளை ஆ) பெறுதல்களை இ) பொறுப்புகளை ஈ) முதலினை

**96. உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்?**

அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்

இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

**97. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?**

அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்

இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

**98. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் ________ காண்பிக்கிறது.**

அ) இலாபத்தினை ஆ) நிதி நிலையினை இ) விற்பனையை ஈ) கொள்முதலை

**99. இருப்பாய்வில் காணப்படும் எடுப்புகள்**

அ) கொள்முதலோடு கூட்டப்படும் ஆ) கொள்முதலிலிருந்து கழிக்கப்படும்

இ) முதலோடு கூட்டப்படும் ஈ) முதலிலிருந்து கழிக்கப்படும்

**100. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்?**

அ) வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்

ஆ) இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்

இ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

ஈ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

**101. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?**

அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

**102. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து

இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

**103. முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது.**

அ) வியாபாரக் கணக்கில் பற்றுப் பக்கம்

ஆ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்

இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

ஈ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

**104. நிகர இலாபம்.**

அ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்

ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும்

ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்

**105. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது.**

அ) அடக்க விலையில் ஆ) சந்தை விலையில்

இ) அடக்க விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்

ஈ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

**106. முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது.**
அ) இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கம்
ஆ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்
இ) மேற்கண்ட இரண்டிலும் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**107. வாரா ஐயக்கடன் ஒதுக்கு கணக்கு ஏற்கனவே இல்லையெனில், உருவாக்கப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கு.**
அ) வாராக்கடன் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
ஆ) பற்பல கடனாளிகள் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
இ) வாராக்கடன் கணக்கில் வரவு வைக்க வேண்டும்
ஈ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

**108. கணினியை கணக்கியலில் பொதுவாக உபயோகப்படுத்தப்படும் பகுதிகள்.**
அ) வணிக நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்
ஆ) சம்பளப் பட்டியல் கணக்கிடுதல்
இ) பண்டகச் சாலைக் கணக்கியல் ஈ) மேலே கூறிய அனைத்தும்

**109. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் இவைகளுக்கு ஏற்றவை.**
அ) சிறிய, பாரம்பரிய வணிகம் ஆ) பெரிய, நடுத்தர வணிகம்
இ) பெரிய, தனித்தன்மையான வணிகம் ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

**110. பின்வருனவற்றில் எது கணினி அமைப்பின் கூறு அல்ல?**
அ) உள்ளீட்டு அலகு ஆ) வெளியீட்டு அலகு
இ) தரவு ஈ) மையச் செயல்பாட்டு அலகு

**111. வெளியீட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம்**
அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ) ஒளியியல் வருடி ஈ) விசைப் பலகை

**112. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்றானது**
அ) கணினி அமைப்பு செயலிழத்தல் ஆ) துல்லியத்தன்மை
இ) பலதுறைப் புலமை ஈ) தேக்ககம்

**113. பின்வருவனவற்றில் எந்த ஒன்று, கணக்குகளை குறிமுறையாக்கம் செய்யும் முறைகளில் இல்லாதது?**
அ) அணுகக் குறிமுறை ஆ) தொடர்ச்சியான குறிமுறை
இ) தொகுப்புக் குறிமுறை ஈ) மதியோட்டுக் குறிமுறை

**114. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.**
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென் பொருள்
ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

**115. குறிமுறைகள் மற்றும் நிரல்கள் எழுதுவர்கள் பின்வருமாறு அழைக்கப்படுகின்றனர்.**

அ) அமைப்பு பகுப்பாய்வாளர்கள் ஆ) அமைப்பு வடிவமைப்பாளர்கள்

இ) அமைப்பு இயக்குபவர்கள் ஈ) அமைப்பு நிரலாளர்கள்

**116. கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம்.**

அ) அமைப்பு மென்பொருள் ஆ) செயல்பாட்டு மென்பொருள்

இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்க முறைமை

**விடைகள்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆ | 21 | ஈ | 41 | அ | 61 | இ | 81 | ஆ | 101 | இ |
| 2 | ஈ | 22 | ஆ | 42 | ஆ | 62 | ஆ | 82 | இ | 102 | ஈ |
| 3 | ஈ | 23 | ஆ | 43 | ஈ | 63 | ஈ | 83 | ஆ | 103 | இ |
| 4 | இ | 24 | ஈ | 44 | இ | 64 | அ | 84 | ஆ | 104 | ஆ |
| 5 | ஆ | 25 | ஆ | 45 | இ | 65 | ஆ | 85 | அ | 105 | ஈ |
| 6 | இ | 26 | இ | 46 | இ | 66 | ஈ | 86 | ஆ | 106 | இ |
| 7 | ஆ | 27 | அ | 47 | ஈ | 67 | இ | 87 | அ | 107 | ஈ |
| 8 | ஆ | 28 | ஆ | 48 | இ | 68 | அ | 88 | இ | 108 | ஈ |
| 9 | இ | 29 | ஈ | 49 | ஈ | 69 | இ | 89 | ஆ | 109 | ஆ |
| 10 | ஈ | 30 | ஈ | 50 | இ | 70 | ஆ | 90 | ஈ | 110 | இ |
| 11 | ஈ | 31 | இ | 51 | ஈ | 71 | ஆ | 91 | இ | 111 | ஆ |
| 12 | அ | 32 | ஈ | 52 | ஆ | 72 | ஆ | 92 | ஈ | 112 | அ |
| 13 | ஈ | 33 | ஆ | 53 | அ | 73 | ஆ | 93 | ஆ | 113 | அ |
| 14 | இ | 34 | இ | 54 | இ | 74 | இ | 94 | ஆ | 114 | ஆ |
| 15 | அ | 35 | இ | 55 | அ | 75 | ஆ | 95 | ஈ | 115 | ஈ |
| 16 | இ | 36 | ஆ | 56 | ஈ | 76 | அ | 96 | அ | 116 | ஆ |
| 17 | ஆ | 37 | இ | 57 | ஆ | 77 | இ | 97 | இ | | |
| 18 | ஈ | 38 | அ | 58 | இ | 78 | ஆ | 98 | ஆ | | |
| 19 | ஆ | 39 | இ | 59 | அ | 79 | ஆ | 99 | ஈ | | |
| 20 | அ | 40 | அ | 60 | இ | 80 | ஈ | 100 | ஆ | | |

## முக்கிய வினாக்கள் (இரண்டு மதிப்பெண்)

**1. கணக்கியலை வரையறு.**

அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்க கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம் தகவல்களை பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

**2. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.**

1. அளவிடுதல் 2. முன்னறிதல்

**3. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?**

குறிப்பேடு → பேரேடு → இருப்பாய்வு → வியாபார கணக்கு
இலாப நட்ட கணக்கு → இருப்பு நிலைக் குறிப்பு

**4. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?**

| <u>அ) அக பயனீட்டாளர்கள்</u> | <u>ஆ) புறப்பயனீட்டாளர்கள்</u> |
|---|---|
| 1. உரிமையாளர்கள் | 1. கடனீந்தோர் |
| 2. நிர்வாகம் | 2. முதலீட்டாளர்கள் |
| 3. பணியாளர்கள் | 3. பொதுமக்கள் |

**5. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.**

1. ரொக்க அடிப்படை 2. நிகழ்வு அல்லது வணிக அடிப்படை 3. கலப்பின அடிப்படை

**6. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு .**

" கணக்கேடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்". **- J.R. பேட்லிபாய்**

**7. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?**

- பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணம் கருத்து என பொருள்படும்.

**8. தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க.**

- ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.

**9. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?**

- முழுமையான மற்றும் உண்மையான தகவல்களும், நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

**10. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.**

- கணக்கியல் கொள்கைகளும், நடைமுறைகளும் தொடர்ச்சியாக ஒரு கணக்காண்டிலிருந்து மற்றொரு கணக்காண்டிற்கும் பின்பற்றப்படும் என்பதை இம்மரபு தெரிவிக்கிறது.

**11. கணினி என்றால் என்ன?**

- கணினி என்பது ஒரு மின்னணு சாதனம்.
- இது மூலத் தரவுகளை உள்வாங்கி பயனுள்ள தகவல்களாகத் தருகிறது.

**12. கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?**

- கணினியை பயன்படுத்தி கணக்குகளை பராமரிக்கும் முறை.

**13. வன்பொருள் என்றால் என்ன?**

- கணினியின் இயற்கூறுகளை உள்ளடக்கியது அதன் வன்பொருளாகும்.
- **எகா:** விசைப்பலகை, சுட்டி, இயக்குபிடி தொடுதிரை

**14. மென்பொருள் என்றால் என்ன?**

வன்பொருள் மற்றும் பயனாளிக்கும் இடையே அமையும் நிரல்களின் தொகுப்பு

**15. கணக்கியல் மென்பொருள் என்றால் என்ன?**

- பயனாளிகளின் தேவைக்கேற்ப அறிக்கைகளை உருவாக்குவதாகும்.

**16. ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.**

1. ஆயத்த மென்பொருள் 2. திருத்தி அமைக்கப்பட்ட மென்பொருள்

**17. ஆயத்த மென்பொருள்களுக்கான உதாரணங்களில் ஏதேனும் இரண்டைத் தரவும்.**

1. Tally 2. Busy

**18. குறிமுறை என்றால் என்ன?**

- குறிமுறை என்பது ஒரு அடையாள குறி.

**19. கணக்குகள் குழுப்படுத்துதல் என்றால் என்ன?**

- கணக்குகளை முதன்மை மற்றும் துணைத் தலைப்பு என்று வகைப்படுத்துதல் குழுப்படுத்துதல் என்று பெயர்;

**20. மதியோட்டுக் குறிமுறை என்றால் என்ன?**

- எழுத்துகள் அல்லது சுருக்கங்கள்

| | | |
|---|---|---|
| **எகா** | கு.ப.எ | குறிப்பேட்டு பக்க எண் |
| | பே.ப.எ | பேரேட்டு பக்க எண் |

## கூடுதல் வினாக்கள்

**21. இருப்பாய்வு என்றால் என்ன?**

- பேரேட்டு கணக்குகளில் உள்ள பற்று மற்றும் வரவு இருப்புகளை உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.

**22. இருப்பாய்வின் படிவம் தருக.**

**--------------- ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு ₹ | வரவு இருப்பு ₹ |
|---|---|---|---|---|

**23. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?**

1. இருப்பு முறை
2. மொத்தத் தொகை முறை
3. மொத்தத் தொகை மற்றும் இருப்பு முறை

**24. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?**

- நிதி சார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள், ஆதார ஆவணங்கள் ஆகும்.

**25. இரட்டை பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.**

**கணக்கியலின் பொன்னான விதிகள்**

| | | |
|---|---|---|
| **ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| **சொத்து கணக்கு** | உள் வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவு கணக்கு** | அனைத்து செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

**26. பேரேடு என்றால் என்ன?**

- அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி முடிவைக் காட்டக்கூடிய ஒரு தொகுப்பு பேரேடு ஆகும்.

**27. ஏதேனும் நான்கு துணை ஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.**

1. கொள்முதல் ஏடு
2. கொள்முதல் திருப்ப ஏடு
3. விற்பனை ஏடு
4. விற்பனைத் திருப்ப ஏடு

**28. கொள்முதல் ஏடு என்றால் என்ன?**

கடனுக்கு சரக்கு வாங்குவது மட்டுமே பதிவு செய்யப்படும் ஏடாகும்.

**29. விற்பனை ஏடு என்றால் என்ன?**

கடனுக்கு விற்கப்படும் சரக்குகள் மட்டுமே பதிவு செய்யப்படும் ஏடாகும்.

**30. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?**

1. தனிப் பத்தி ரொக்க ஏடு 2. இருபத்தி ரொக்க ஏடு 3. முப்பத்தி ரொக்க ஏடு

**31. ரொக்கத் தள்ளுபடி என்றால் என்ன?**

சரக்கு வாங்கியதற்கான தொகையை உடனடியாக திரும்பச் செலுத்தும் நபர்களுக்கு வழங்கக் கூடிய தள்ளுபடி ரொக்கத் தள்ளுபடி எனப்படும்.

**32. வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?**

அதிக எண்ணிக்கையில் பொருட்களை வாங்கியவருக்கு விலைப்பட்டியலில் உள்ள விலையை விட குறைவாக வழங்குவது வியாபாரத் தள்ளுபடி எனப்படும்.

**33. சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?**

அனைத்து சிறு செலவினங்களையும் பதிவு செய்வதற்கான ஏடாகும்.

**34. வங்கி மேல்வரைப் பற்று என்றால் என்ன?**

வங்கியில் நடப்பு கணக்கு வைத்திருக்கும் வியாபாரி தனது கணக்கில் இருப்புத் தொகை இல்லாத போதும் ஒரு குறிப்பிட்ட தொகையை தனது கணக்கிலிருந்து பெறக்கூடிய தற்காலிக கடனாகும்.

**35. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?**

ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் இருப்பையும், வங்கி அறிக்கையின் இருப்பையும் சரிகட்டி வேறுபாட்டிற்கான காரணங்களை தொகையுடன் கூறும் ஒரு அறிக்கையே “வங்கிச் சரிகட்டும் பட்டியல்” என்றழைக்கப்படுகிறது.

**36. விதிப்பிழை என்றால் என்ன?**

அடிப்படைக் கணக்கியல் விதிகளை தவறாக பின்பற்றுவது.

**37. பகுதி விடு பிழை என்றால் என்ன?**

கணக்காளர் நடவடிக்கையின் ஒரு பகுதியை மட்டும் பதிவு செய்யத் தவறுவது.

**38. முழு விடு பிழை என்றால் என்ன?**

நடவடிக்கை முழுவதையும் ஏடுகளில் பதிவு செய்யத் தவறுவது.

**39. ஈடு செய் பிழைகள் என்றால் என்ன?**

வெவ்வேறு பிழைகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்பவையாக அமைவது.

**40. தேய்மானம் என்றால் என்ன?**

நிலைச்சொத்தின் அடக்க விலையை அதனுடைய பயனளிப்புக் காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும்.

**41. தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?**

1. நேர் கோட்டு முறை அல்லது நிலைத் தவணை முறை அல்லது ஆரம்ப அடக்க விலை முறை
2. குறைந்து செல் மதிப்பு முறை அல்லது குறைந்து செல் இருப்பு முறை

**42. பயன் தீரும் சொத்துகள் என்றால் என்ன?**

- சொத்துகள் தோண்டி எடுக்கும் செயல்முறையில்,தன் மதிப்பை படிப்படியாக இழக்கிறது.
- **எகா:** சுரங்கங்கள், கற்சுரங்கங்கள்

**43. நிலை சொத்துகள் என்றால் என்ன?**
வணிகத்தில் தொடர்ந்து பயன்படுத்துவதற்காக வாங்கப்பட்ட சொத்துகள் நிலை சொத்துக்கள் ஆகும்.
**எகா:** நிலம் மற்றும் கட்டடம், பொறி மற்றும் இயந்திரம், அறைகலன்

**44. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகளை குறிப்பிடுக.**

| நேரடி செலவுகள் | மறைமுக செலவுகள் |
|---|---|
| 1. உள்தூக்குக் கூலி | 1. சம்பளம் |
| 2. கூலி | 2. வாடகை |
| 3. துறைமுக கட்டணம் | 3. மின் கட்டணம் |

**45. வருவாயினச் செலவு என்றால் என்ன?**
வணிக நிறுவனத்தின் அன்றாட வருவாய் ஈட்டும் திறனைத் தக்க வைத்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் செலவாகும்.

**46. முதலினச் செலவு என்றால் என்ன?**
ஒரு கணக்காண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவின் பயனானது எதிர்வரும் ஆண்டுகளுக்கும் தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு முதலினச்செலவாகும்.

**47. முதலின வரவு என்றால் என்ன?**
வருவாயினத்தைச் சாராத வரவுகள் அனைத்தும் முதலின வரவு எனப்படும்.

**48. வருவாயின வரவு பற்றி சிறு குறிப்பு தரவும்.**
வணிகத்தின் வழக்கமான நடைமுறைகளிலிருந்து பெறக்கூடிய வருமானங்கள் வருவாயின வரவுகள் ஆகும்.

**49. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?**
நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால் அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.

**50. பயன் தீரும் சொத்துகள் என்றால் என்ன?**
இவ்வகையான சொத்துகள் தோண்டி எடுக்கும் செயல்முறையில்,தன் மதிப்பை படிப்படியாக இழக்கிறது. **எகா:** சுரங்கங்கள், கற்சுரங்கங்கள்

**51. சரிக்கட்டுப் பதிவுகள் என்றால் என்ன?**
கணக்காண்டின் இறுதியில் எடுத்துக் கொள்ளப்படாத நடவடிக்கைகளுக்காக செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவே சரிகட்டுப் பதிவு எனப்படும்.
**எகா**: கொடுபட வேண்டிய செலவினங்கள், முன்கூட்டி செலுத்திய செலவினங்கள்,

**52. கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன?**
கணக்காண்டிற்கான செலவுகள் செய்யப்பட்டு, அவை கணக்காண்டின் இறுதிக்குள் செலுத்தப்படாமல் இருந்தால் அது கொடுபட வேண்டிய செலவுகள் எனப்படும்.

**53. முன்கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன?**
நடப்பு ஆண்டில் செலுத்தப்பட்ட ஒரு செலவு அடுத்த கணக்காண்டிற்கும் பலன் தருமானால், அதனை முன்கூட்டிச் செலுத்திய/ “பயன்தீரா செலவுகள்” எனப்படும்.

**54. பேரேடு என்றால் என்ன?**
அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி விளைவைக் காட்டக்கூடிய ஒரு தொகுப்பு அறிக்கையாகும்.

**55. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?**

குறிப்பேட்டில் பதிவாகியுள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

**56. பற்று இருப்பு என்றால் என்ன?**

வரவு பக்கத்தின் மொத்தத்தை விட, பற்றுப் பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு பற்று இருப்பு எனப்படும்.

**57. வரவு இருப்பு என்றால் என்ன?**

பற்றுப் பக்கத்தின் மொத்தத்தை விட வரவு பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு வரவு இருப்பு எனப்படும்.

**58. பின்வருவனவற்றுக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையை தருக.**

**அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்**

கடனீந்தோருக்கு அளித்தது₹ 10,000

**விளைவுகள்:**

1. ரொக்கம் வெளிச்செல்லுதல் → ரொக்கம் குறையும்
2. கடனீந்தோர் பெறுதல் → பொறுப்புகள் குறையும்

**ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்துக் குறைதல்**

₹ 5,000 மதிப்புள்ள அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கப்பட்டது.

**விளைவுகள்:**

அறைகலன் உள் வருதல் →சொத்து மதிப்பு உயர்தல்

ரொக்கம் வெளிச்செல்லுதல்→ சொத்து மதிப்பு குறைதல்

**59. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?**

- தனிநபர் கணக்கு
- சட்டமுறை ஆள்சார் கணக்கு
- பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

**60. பற்று குறிப்பு என்றால் என்ன?**

- பற்றுக் குறிப்பு என்பது ஒரு ஆவணம், சீட்டு அல்லது சரக்கு திருப்பி அனுப்புவதற்கு அளிக்கப்படும் அறிக்கை ஆகும்

**61. வரவு குறிப்பு என்றால் என்ன?**

- வரவுக் குறிப்பு என்பது விற்பனையாளர் வாடிக்கையாளரிடமிருந்து சரக்குகளை பெற்றுக் கொண்டதற்கான அறிக்கை ஆகும்.

**62. இடாப்பு என்றால் என்ன?**

- இடாப்பு என்பது ஒரு வணிக ஆவணம் அல்லது இரசீது அல்லது அறிக்கை ஆகும்.

**63. ரொக்க ஏடு என்றால் என்ன?**

- ரொக்க ஏடு என்பது ரொக்க நடவடிக்கைகள் மட்டும், நாள் வரிசைப்படி பதியக் கூடிய ஒரு ஏடாகும்.

# கட்டாய வினாக்கள்

## குறுகிய வினாக்கள் (மூன்று மதிப்பெண் )

**1. கணக்கியலின் பொருளை விளக்குக.**

கணக்கியல் என்பது நிதியியல் தகவல்களை இனம் காணுதல், அளவிடுதல், பதிவு செய்தல், வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்ந்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது.

**2. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக. (ஏதேனும் மூன்று)**

**1. நிதிநிலைக் கணக்கியல்**

நிதியியல் நடவடிக்கைகளை பதிவு செய்யக் கூடிய வரலாற்று தன்மையுடையது.

**2. அடக்க விலை கணக்கியல்**

அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவினங்களை ஒதுக்கீடு செய்வதாகும்

**3. மேலாண்மை கணக்கியல்**

நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கு துணை செய்வதேயாகும்.

**4. சமூகப் பொறுப்புக் கணக்கியல்**

கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.

**5. மனித வளக் கணக்கியல்**

மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல்

**3. பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?**

- ஒரு கணக்காண்டில் ஈட்டிய வருவாயை அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடுவதைக் குறிக்கும்.
- இது கணக்கியல் காலக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- அந்தக் கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**4. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்'- விவரி**

- பணத்தால் அளவிட கூடிய அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும்.
- பணம் சாராத நடவடிக்கைகள் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை.

**5. ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.**

- ஒரு வணிக நிறுவனம் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.
- இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்ய, கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- சொத்துக்கள் புராதான அடக்க விலையில் பதிவு செய்யப்படுகின்றன

**6. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக**

**(அ) முதல் (ஆ) கட்டடம் (இ) உள் ஏற்றிச் செல் செலவு (ஈ) ரொக்கம்**

**(உ) தள்ளுபடிப் பெற்றது (ஊ) வங்கி (எ) கொள்முதல் (ஏ) சந்துரு**

**(ஐ) கொடுபட வேண்டிய கூலி**

**தீர்வு:**

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ) | முதல் | ஆள்சார் கணக்கு |
| ஆ) | கட்டடம் | சொத்து கணக்கு |
| இ) | உள் ஏற்றிச் செல் செலவு | பெயரளவு கணக்கு |
| ஈ) | ரொக்கம் | சொத்து கணக்கு |
| உ) | தள்ளுபடி பெற்றது | பெயரளவு கணக்கு |
| ஊ) | வங்கி | ஆள்சார் கணக்கு |
| எ) | கொள்முதல் | பெயரளவு கணக்கு |
| ஏ) | சந்துரு | ஆள்சார் கணக்கு |
| ஐ) | கொடுபடவேண்டிய கூலி | பிரதிநிதித்துவஆள்சார் கணக்கு |

**7. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளின்இருப்புகளைக் கண்டறிந்து, அவை இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவு பத்தியில் இடம் பெறுமா எனக்காட்டுக.**

**1) பற்பல கடனாளிகள் 2) பற்பல கடனீந்தோர் 3) கை ரொக்கம்**
**4) வங்கி மேல்வரைப்பற்று 5) சம்பளம் 6) தள்ளுபடி அளித்தது**
**7) பொறி இயந்திரம் 8) அறைகலன்**

**தீர்வு:**

| வ.எண் | கணக்கின் பெயர் | பற்று இருப்பு | வரவு இருப்பு |
|---|---|---|---|
| 1 | பற்பல கடனாளிகள் | பற்று | |
| 2 | பற்பல கடனீந்தோர் | - | வரவு |
| 3 | கை ரொக்கம் | பற்று | |
| 4 | வங்கி மேல்வரைப் பற்று | - | வரவு |
| 5 | சம்பளம் | பற்று | |
| 6 | தள்ளுபடி அளித்தது | பற்று | |
| 7 | பொறி இயந்திரம் | பற்று | |
| 8 | அறைகலன் | பற்று | |

**8. அனாமத்துக் கணக்கு பற்றிக் குறிப்பு எழுதவும்.**

இருப்பாய்வு சமநிலையடையாத போது, வேறுபாட்டுத் தொகையை அனாமத்துக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்க வேண்டும்.

**9. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.**

ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவு தன்மைகள் பதியப்பட்டால், அது எதிர்ப்பதிவு எனப்படும். **உதாரணம்:1. வங்கியில் பணம் செலுத்தியது**.
**2. வங்கியிலிருந்து அலுவலக செலவுகளுக்காக பணம் எடுத்தது**.

**10. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.**

| அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|
| **தன்மை** | அடிக்கடி நிகழாத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மையுடையது. |
| தொகை | பேரளவு | சிறிய அளவு |
| **பகிர்வு** | பகிர்ந்தளிக்க முடியாது | பகிர்ந்து அளிக்கப்படும். |

**10. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.**

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டுகளுக்கு கிடைக்குமானால் அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.

**உதாரணம்:**

1. பேரளவிலான விளம்பரச் செலவு.
2. நிலைச் சொத்து மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவு.

**12. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?**

**1. ஆயத்த மென்பொருள்**

வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய மென்பொருள் ஆகும்.

**உதாரணங்கள்:**

1. Tally 2. Busy 3. Marg 4. Profit books

**2. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்**

வணிக நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப திருத்தி அமைக்கப்பட்ட மென்பொருள் ஆகும்.

**உதாரணம்:** பணியாளர்களின் வருகையினை பதிவு செய்யும் மென்பொருள்

**3. உருவாக்கப்பட்ட மென்பொருள்**

தேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட மென்பொருள்.

**13. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.**

**1. அதிகப்படியான நிறுவுதல் செலவு**

இதனை நிறுவ அதிகப்படியான செலவு ஏற்படுகிறது.

**2. பயிற்சி அளித்தலின் செலவுகள்**

பணியாளர்களின் பயிற்சிக்காக அதிக செலவு செய்யப்படுகிறது.

**3. பாதுகாப்பில் தோல்வி**

உருவாக்கிய நபரே உண்மையான ஏடுகளை சேதப்படுத்தி எளிதில் ஏமாற்றலாம்.

**14. பல்வேறு வகையான குறிமுறையாக்க முறைகளைக் குறிப்பிடுக.**

**1. தொடர்ச்சியான குறிமுறை**

தொடர்ச்சியான குறிமுறையில், எண்கள் மற்றும் எழுத்துக்களை அடுத்தடுத்து வரிசையாக ஒதுக்கப்படுவதாகும்.

**உதாரணம்:**

| **குறிமுறை** | **கணக்குகள்** |
|---|---|
| CL001 | ABC |
| CL002 | XYZ |
| CL003 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |

**2. தொகுப்புக்குறிமுறை**

தொகுப்புக் குறிமுறையில், ஒரு குறிப்பிட்ட பரப்பு எண்களை விரும்பிய அளவிலான துணைப் பரப்புகளாகப் பிரித்தெடுக்கப்படும்

| **குறிமுறை** | **விற்பனையாளர் வகை** |
|---|---|
| 100-199 | சிறிய விசைக் குழாய்கள் |
| 200-299 | நடுத்தர விசைக் குழாய்கள் |
| 300-399 | குழாய்கள் |
| 400-499 | பொறிகள் |

**3. மதியோட்டுக் குறிமுறை**

மதியோட்டுக் குறிமுறை எழுத்துக்கள் அல்லது சுருக்கங்கள் ஒரு துண்டு தகவலை மனதிற்குள் பதிய செய்ய அடையாளமாகக் கொண்டிருக்கும்.

**உதாரணமாக.**

| குறிமுறை | தகவல் |
|---|---|
| பேபஎ | பேரேட்டு பக்க எண் |
| இஎ | இரசீது எண் |

## கட்டாய வினாக்கள் (ஐந்து மதிப்பெண்)

**1. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.**

**1. முறையான பதிவேடுகள்**

நிதி சார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில் முறையாக பதியப்படுகின்றன.

**2. நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்**

நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் நிதி நிலையையும் அறிய முடியும்.

**3. வளர்ச்சியை மதிப்பிடல்**

பல்வேறு செயல்களின் வளர்ச்சியை கண்டறியவும் இயலும்.

**4. முடிவெடுக்க உதவுதல்**

தக்க முடிவுகளை எடுக்க தேவையான தகவல்களை தருகிறது.

**5. பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்**

பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

**2. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?**

**அ) முதலீட்டாளர்கள்** **ஆ) அரசு**

**அ) முதலீட்டாளர்கள்**

நிதி நிலையை அறிந்து கொண்டு தங்களது முதலீட்டு முடிவுகளை எடுக்க உதவுகிறது .

**ஆ) அரசு**

வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து கொண்டு கொள்கை சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது

.

**3. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.**

**1. ஏடுகளை பராமரிப்பவர்**

நிதி சார்ந்த நடவடிக்கைகளை பதிவு செய்து ஏடுகளை பராமரிக்கிறார்.

**2. நிர்வாகத்திற்கு தகவல்களைத் தருபவர்**

நிர்வாகத்திற்குத் தேவையான தகவல்களை கணக்காளர் அளித்து உதவுகிறார்.

**3. வணிகச் சொத்துக்களின் காப்பாளர்**

சொத்துக்களுக்கான பதிவேடுகளை பராமரித்து அவற்றை பாதுகாக்கின்றார்.

**4. நிதி ஆலோசகர்**

வணிக மேலாளர்களுக்கு நிதி ஆலோசகராக செயல்படுகின்றார்.

**5. வரி மேலாளர்**

வரி மேலாண்மை குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

**4. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:**

**(i) வெளித்தூக்குக்கூலி** **(ii) உள்தூக்குக்கூலி**

**(iii) விற்பனை** **(iv) கொள்முதல்**

**(v) வாராக்கடன்** **(vi) வட்டிச்செலுத்தியது**

**(vii) வட்டிப்பெற்றது** **(viii) தள்ளுபடிப்பெற்றது**

**(ix) முதல்** **(x) எடுப்புகள்**

**(xi) விற்பனைத்திருப்பம்** **(xii) கொள்முதல்திருப்பம்**

**தீர்வு:**

| வ.எண் | கணக்கின் பெயர் | பற்று இருப்பு | வரவு இருப்பு |
|---|---|---|---|
| 1 | வெளித்தூக்குக் கூலி | பற்று | |
| 2 | உள்தூக்குக் கூலி | பற்று | |
| 3 | விற்பனை | | வரவு |
| 4 | கொள்முதல் | பற்று | |
| 5 | வாராக்கடன் | பற்று | |
| 6 | வட்டிச் செலுத்தியது | பற்று | |
| 7 | வட்டிப் பெற்றது | | வரவு |
| 8 | தள்ளுபடிப் பெற்றது | | வரவு |
| 9 | முதல் | | வரவு |
| 10 | எடுப்புகள் | பற்று | |
| 11 | விற்பனைத் திருப்பம் | பற்று | |
| 12 | கொள்முதல் திருப்பம் | | வரவு |

**5. இரட்டை பதிவு முறை என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.**

- ஒரு நிறுவனத்தின் நிதி சார்ந்த அனைத்துப் பதிவுகளையும் அறிவியல் பூர்வமாக முழுமையாக பதிவு செய்யும் முறையாகும்.
- ஒவ்வொரு நடவடிக்கையும் இரண்டு தன்மைகளை தன்னகத்தை கொண்டுள்ளன.
- அவை முறையே, பெறும் தன்மை மற்றும் செலுத்தும் தன்மை ஆகும்.

**இரட்டை பதிவு முறையின் நன்மைகள்**

**1. துல்லியத்தன்மை**

இருப்பாய்வு தயாரிப்பதன் மூலம் துல்லியத்தை கணக்கிட முடியும்.

**2. வணிக முடிவுகளை கணக்கிடுதல்**

கணக்காண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் கணக்கிட முடியும்.

**3. ஒப்பீட்டு ஆய்வு**

பல நிறுவனங்களின் முடிவுகளோடும் ஒப்பிட்டு பார்க்க முடியும்.

**4. பொதுவான ஏற்புத் தன்மை**

நிதி நிறுவனங்கள், அரசு, அதிகாரிகள் மற்றும் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**6. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.**

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| **1. பதிவு செய்தல்** | நடவடிக்கைகள் நிகழ்ந்த உடன் | அதே நாளில் அல்லது வாரத்தின் கடைசி நாள் |
| **2. பதிவு செய்யும் நிலை** | முதல் நிலை | இரண்டாவது நிலை |
| **3. பதிவு செய்யும் வரிசை** | நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி | கணக்குகளின் வரிசைப்படி |
| **4. வழிமுறை** | குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| **5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல்** | தயாரிக்க இயலாது. | தயாரிக்க அடிப்படையாகிறது. |
| **6. நிகர இருப்பு** | நிகர இருப்பினை அறிய முடியாது. | நிகர இருப்பினை அறியலாம். |

**7. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.**

| | | <u>விடைகள்</u> |
|---|---|---|
| **1. ரொக்கத்திற்கு சரக்கு விற்றது** | - | ரொக்க ஏட்டில் |
| **2. கடனுக்கு சரக்கு விற்றது** | - | விற்பனை ஏட்டில் |
| **3. கடனுக்கு சரக்கு வாங்கியது** | - | கொள்முதல் ஏட்டில் |
| **4. உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.** | - | உரிய குறிப்பேட்டில் |
| **5. சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திரும்பிய சரக்கு** | - | கொள்முதல் திருப்ப ஏட்டில் |
| **6. கடனுக்கு சொத்துகள் வாங்கியது** | - | உரிய குறிப்பேட்டில் |

**8. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

| அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபாரத் தள்ளுபடி |
|---|---|---|
| **1.நோக்கம்** | தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்க | அதிக எண்ணிக்கையில் பொருட்களை வாங்குவதற்கு |
| **2.வழங்கப்படும் காலம்** | தொகையை செலுத்தும் போது | பொருட்களை விற்கும்போது |
| **3. தள்ளுபடித் தொகை** | காலத்தை அடிப்படையாக கொண்டது. | பொருட்கள் அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| **4.கணக்கேடுகளில் பதிவு செய்தல்** | பதியப்படுகிறது. | பதியப்படுவதில்லை. |
| **5. இடாப்பு மதிப்பில் கழித்து காட்டுதல்** | கழித்து காட்டப்படமாட்டாது. | பட்டியல் விலையிலிருந்து கழித்து காட்டப்படும். |

**9. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?**

1. **சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய**
   சரியான இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிய தேய்மானம் நீக்கப்படுகிறது.
2. **உண்மையான மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த**
   தேய்மானம் நீக்கப்படுவதால் உண்மையான மற்றும் நியாயமான நிதி நிலையை கண்டறிய இயலும்.
3. **நிலை சொத்தினை மாற்றுவதற்காக**
   வணிகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு ஒரு புதிய சொத்து வாங்க முடியும்.
4. **வரிச் சலுகைகளைப் பெற**
   வரிச் சுமையை குறைப்பதற்காக தேய்மானம் கணக்கிடப்படுகிறது.
5. **சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய**
   பிற சட்டத்தின் சரத்துகளை பூர்த்தி செய்வதற்காக தேய்மானம் நீக்கப்படுகிறது.

**10. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

1. **தேய்வு மற்றும் உராய்வு**
   நிலைச் சொத்தை பயன்படுத்துவதால் தேய்வு மற்றும் உராய்வு காரணமாக தேய்மானம் ஏற்படுகிறது.
2. **காலப்போக்கு**
   காலப்போக்கு காரணமாக அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
3. **வழக்கொழிவு**
   நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைகிறது.
4. **நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது**
   நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
5. **பராமரிப்பின்மை**
   சொத்துக்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

**11. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.**

| அடிப்படை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு |
|---|---|---|
| **1.தன்மை** | அடிக்கடி நிகழாத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மையுடையது. |
| **2.நோக்கம்** | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பதாகும். | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வதாகும் |
| **3.பயனளிப்பு காலம்** | இச்செலவின் பலன் நீண்ட காலத்திற்கு கிடைக்கும். | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் கிடைக்கிறது. |
| **4.இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு** | இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனைப் பராமரித்து வைத்துக்கொள்ள உதவும். |
| **5.கணக்கியல் நடைமுறை** | இருப்பு நிலை குறிப்பில் சொத்துக்கள் பக்கத்தில் தோன்றும் | வியாபார, இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் தோன்றும். |

**12. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் இரண்டு வேற்றுமைகளை எழுதுக.**

**இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்**

| அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| **1. தன்மை** | பேரேட்டுக் கணக்கு இருப்புகளின் பட்டியல் ஆகும். | சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நிலையைக் காட்டும் அறிக்கை ஆகும். |
| **2. நோக்கம்** | கணக்கிட்டு சரித் தன்மையை பரிசோதிக்க | வணிகத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ள |
| **3. உள்ளடக்கம்** | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவு கணக்குகள். | ஆள்சார் மற்றும் சொத்து கணக்குகள் |
| **4. வடிவமைப்பு** | பற்று மற்றும் வரவு இருப்பு பத்திகளை உள்ளடக்கியது. | சொத்துகள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியது. |
| **5. கட்டாயம்** | தயாரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. | தயாரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. |

**13. கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பல்வேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்.**

கணக்கியல் சார்ந்த நடவடிக்கைகளை உள்ளீடாக எடுத்துக் கொண்டு, அவற்றை கணக்கியல் மென்பொருள் மூலம் செயலாக்கப்பெறச் செய்கிறது.

- நாளேடுகள்/குறிப்பேடுகள்
- பேரேடு
- இருப்பாய்வு
- வியாபாரக் கணக்கு
- இலாப நட்டக் கணக்கு
- இருப்பு நிலைக் குறிப்பு

**14. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.**

**உள்ளீட்டு சாதனங்கள்**

1. விசைப்பலகை (Keyboard)
2. ஒளியியல் வருடி (Scanner)
3. சுட்டி (Mouse)
4. இயக்குபிடி (Joystick)
5. தொடுதிரை (Touch screen)
6. எழுத்தாணி (Stylus)

**வெளியீட்டு சாதனங்கள்**

1. திரையகம் (Monitor)
2. அச்சுப்பொறி (Printer)

# பயிற்சி வினாக்கள்
# (மூன்று மதிப்பெண்)

1. **விடுபட்ட பகுதிகளை நிரப்புக.**

| | சொத்துகள்₹= | பொறுப்புகள் ₹+ | முதல் ₹ |
|---|---|---|---|
| அ) | 30,000 | 20,000 | ? |
| ஆ) | 60,000 | 25,000 | ? |
| இ) | ? | 25,000 | 30,000 |
| ஈ) | ? | 10,000 | 80,000 |
| உ) | 25,000 | ? | 15,000 |
| ஊ) | 40,000 | ? | 30,000 |

**தீர்வு:**

| | சொத்துகள் ₹ = | பொறுப்புகள் ₹ + | முதல் ₹ |
|---|---|---|---|
| அ | 30,000 | 20,000 | **10,000** |
| ஆ | 60,000 | 25,000 | **35,000** |
| இ | **55,000** | 25,000 | 30,000 |
| ஈ | **90,000** | 10,000 | 80,000 |
| உ | 25,000 | **10,000** | 15,000 |
| ஊ | 40,000 | **10,000** | 30,000 |

2. **கணக்கியல்சமன்பாட்டினைநிரப்புக**

(அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
₹ 1,00,000 = ₹ 80,000 + ?

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
` ₹ 2,00,000 = ? + ₹ 40,000

(இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
? = ₹ 1, 60,000 + ₹ 80,000

**தீர்வு:**

அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
₹ 1,00,000 = ₹ 80,000 + **₹ 20,000**

ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
₹ 2,00,000 = **₹ 1,60,000** + ₹ 40,000

இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
**₹ 2,40,000** = ₹ 1,60,000 + ₹ 80,000

3. **2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.**
**சொத்துகள்: ரொக்கம் ₹ 40,000 ; சரக்கிருப்பு ₹ 50,000 ; ராம்என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹ 20,000; இயந்திரம் ₹ 40,000; பொறுப்புகள் : விஜய்என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹ 10,000**
**தொடக்கப் பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.**

**தீர்வு:**

**வினோத் என்பவரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | | பே.ப. எ | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| 2018 ஜன1 | ரொக்க க/கு | ப | | 40,000 | |
| | சரக்கிருப்பு க/கு | ப | | 50,000 | |
| | ராம் க/கு | ப | | 20,000 | |
| | இயந்திரம் க/கு | ப | | 40,000 | |
| | விஜய் க/கு | | | | 10,000 |
| | வினோத் முதல் க/கு | | | | **1,40,000** |
| | (சென்ற ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | | |

**ப வினோத் முதல் க/கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | ₹ | நாள் | விவரம் | கு.ப.எ | ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 ஜன.31 | இருப்பு கீ/இ | | 1,40,000 | 2018 ஜன.1 | சொத்துகள் க/கு | | 1,40,000 |
| | | | 1,40,000 | | | | 1,40,000 |
| | | | | பிப்.1 | **இருப்பு கீ/கொ** | | **1,40,000** |

4. **பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச்சரிகட்டும்பட்டியலை தயார் செய்க.**

(அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 7,130
(ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹ 1,000
(இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹ 800

**தீர்வு:**

**ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர்31- ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | ₹ | ₹ |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 7,130 |
| **கூட்டுக:** | | |
| வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| **கழிக்க:** | | 7,930 |
| செலுத்திய காசோலை வாசூலாகாத்து | | 1,000 |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **6,930** |

5. **இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.**

(அ) விற்பனை ஏட்டில் ₹ 400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(இ) கொள்முதல் ஏட்டில் ₹ 600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
(உ) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு ஏட்டில் ₹ 800 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

**தீர்வு:**

அ) விற்பனை கணக்கில் ₹ 400 வரவு வைக்க வேண்டும்.

ஆ) விற்பனை திருப்ப கணக்கில் ₹ 500 வரவு வைக்க வேண்டும்

இ) கொள்முதல் கணக்கில் ₹ 600 பற்று வைக்க வேண்டும்

ஈ) கொள்முதல் திருப்ப கணக்கில் ₹ 700 பற்று வைக்க வேண்டும்

உ) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு கணக்கில் ₹ 800 பற்று வைக்க வேண்டும்

6. **ஒரு நிறுவனம் ₹ 40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹ 2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர் நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.**

**தீர்வு:**

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவுகைச் செலவுகள்

= 40,000 + 2,000 = ₹ 42,000

$$= \frac{42{,}000}{5} = ₹\,8{,}400$$

7. **ஒரு நிறுமம் ₹ 50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹ 5,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை, மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.**

**தீர்வு:**

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$= \frac{50{,}000 - 5{,}000}{10} = \frac{45{,}000}{10} = ₹\,\mathbf{4{,}500}$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$$

$$= \frac{4{,}500}{50{,}000} \times 100 = \mathbf{9\ \%}$$

**8. பின்வரும் செலவினங்களை முதலினம், வருவாயினம், நீள்பயன் வருவாயினச் செலவினங்களாக, வகைப்படுத்தவும்.**

i) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு.

ii) கட்டடம் பதிவு செய்யும் போது செலுத்திய பதிவுக் கட்டணம்.

iii) பழைய கட்டடம் வாங்கிய போது, அதனைப்பராமரித்து, வண்ணம் பூசி பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் மாற்றியதற்கானச் செலவு.

**தீர்வு:**

i) நீள்பயன் வருவாயினச் செலவு

ii) முதலினச் செலவு

iii) முதலினச் செலவு

**9. பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயினச் செலவினங்களாக வகைப்படுத்தவும்**.

i) நிலம் வாங்குவதற்குச் செய்யப்பட்ட பத்திரப்பதிவு கட்டணம்.

ii) வாங்கிய பழையக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்த பழுது பார்ப்புச் செலவுகள்.

iii) சரக்குக் கொள்முதலின் போது செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்.

iv) கடன் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சட்டச் செலவுகள்.

**தீர்வு:**

i) முதலினச் செலவு

ii) முதலினச் செலவு

iii) வருவாயின செலவு

iv) முதலினச் செலவு

**10. பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் எனக் கூறவும்.**

i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹ 10,00,000.

ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹ 50,000.

iii) கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ₹ 80,000.

iv) பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ₹ 4,00,000.

**தீர்வு:**

i) முதலினச் செலவு

ii) வருவாயின செலவு

iii) வருவாயின செலவு

iv) முதலினச் செலவு

**11. பின்வருவனவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.**

i) இரயில்வேத் துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹ 50,000.

ii) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்.

iii) சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்.

**தீர்வு:**

i) முதலினச் செலவு

ii) வருவாயின செலவு

iii) வருவாயின செலவு

**12. பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயினச் செலவினங்களா எனக் கூறவும்.**

i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டச் செலவுகள் ` 20,000

ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ₹ 12,00,000

iii) தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ₹ 12,000

iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹ 4,000

**தீர்வு:**

i) முதலினச் செலவு

ii) நீள்பயன் வருவாயினச் செலவு

iii) வருவாயின செலவு

iv) வருவாயின செலவு

**13. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

**தீர்வு:**

**சஞ்சயின் எடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு**

ப வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | 570 | விற்பனை | 26,200 | |
| கொள்முதல் | 15,800 | | கழிக்க: வி,திருப்ப | 60 | 26,140 |
| கழிக்க: கொ.திருப்பம் | 90 | 15,710 | இறுதிச் சரக்கிருப்பு | | 860 |
| **மொத்த இலாபம் கீ/இ** | | **10,720** | | | |
| | | 27,000 | | | 27,000 |

14. சரவணனின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் மூலம், டிசம்பர் 31, 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த இலாபத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,50,000 | ஆண்டிற்கான நிகர விற்பனை | 4,00,000 |
| நேரடிச் செலவுகள் | 8,000 | ஆண்டிற்கான நிகர | |
| இறுதிச் சரக்கிருப்பு | 25,000 | கொள்முதல் | 1,50,000 |

**தீர்வு:**

**சரவணனின் எடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும்**

**ப ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு வ**

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | 1,50,000 | நிகர விற்பனை | | 4,00,000 |
| நிகர கொள்முதல் | | 1,50,000 | இறுதிச் சரக்கிருப்பு | | 25,000 |
| நேரடிச் செலவுகள் | | 8,000 | | | |
| **மொத்த இலாபம் கீ/இ** | | **1,17,000** | | | |
| | | 4,25,000 | | | 4,25,000 |

15. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

**தீர்வு:**

விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கச் சரக்கிருப்பு + நிகர கொள்முதல் + நேரடிச்செலவுகள் – இறுதிச் சரக்கிருப்பு

= 10,000 + 80,000 + 7,000-15,000

**= ₹ 82,000**

16. பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கை ரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | இயந்திரம் | 43,200 |

**தீர்வு:**

**பிரகதீஸ் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 -ஆம் நாளைய**

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் | 80,000 | | கடனாளிகள் | | 12,800 |
| கூட்டுக: நிகரஇலாபம் | 4,800 | | கை ரொக்கம் | | 20,000 |
| | 84,800 | | இயந்திரம் | | 43,200 |
| கழிக்க: எடுப்புகள் | 8,800 | 76,000 | | | |
| | | **76,000** | | | **76,000** |

# ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. **பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில்பதிவு செய்க.**

| **2018 மார்ச்** | | **₹** |
|---|---|---|
| 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்குஅறைகலன்வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்தப்பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

**தீர்வு:**

**மனோகர் அவர்களின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப .எ | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2018 மார்ச் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>(மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க/கு ப<br>ரொக்க க/கு<br>(ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கக் கொள்முதல் செய்தது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஷ் க/கு<br>(கடன் கொள்முதல் செய்தது) | | 15,000 | 15,000 |
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>(ரொக்க விற்பனை செய்தது) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு<br>(கடன் விற்பனை செய்தது) | | 10,000 | 10,000 |
| 14 | கமலேஷ் க/கு ப<br>ரொக்க க/கு<br>(கமலேஷிக்கு செலுத்தியது) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>(வாடகை செலுத்தியது) | | 500 | 500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>(ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம்) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>(சொந்த பயன்பாட்டிற்கு பணம் எடுத்தது) | | 4,000 | 4,000 |

**2. பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.**

| **2017** | | | ₹ |
|---|---|---|---|
| ஜூலை | 1 | ஆனந்த்கணக்கின் வரவு இருப்பு | 4,000 |
| | 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| | 18 | ஆனந்திடமிருந்துகடனாகக் கொள்முதல் செய்தது | 8,000 |
| | 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 3,960 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| | 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 5,000 |

**தீர்வு:**

**ப ஆனந்த் க/கு வ**

| நாள் | விவரம் | கு.ப.எ | ₹ | நாள் | விவரம் | கு.ப.எ | ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2017, 15<br>ஜீலை20<br>31 | ரொக்க க/கு<br>ரொக்க க/கு<br>இருப்பு கீ/இ | | 2,000<br>4,000<br>11,000<br>17,000 | 2017, 1<br>ஜீலை18<br>25<br>ஆக.1 | இருப்பு கீ/கொ<br>கொள்முதல்க/கு<br>கொள்முதல்க/கு<br>**இருப்பு கீ/கொ** | | 4,000<br>8,000<br>5,000<br>17,000<br>**11,000** |

**3. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வுதயாரிக்கவும்.**

| **விவரம்** | **₹** | **விவரம்** | **₹** |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கிக் கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளிகள் | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |

**தீர்வு:**

**இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | கொள்முதல் | | 1,00,000 | |
| 2 | வங்கிக்கடன் | | | 75,000 |
| 3 | கடனாளிகள் | | 1,50,000 | |
| 4 | சரக்கிருப்பு | | 35,000 | |
| 5 | விற்பனை | | | 1,50,000 |
| 6 | கடனீந்தோர் | | | 50,000 |
| 7 | ரொக்கம் | | 90,000 | |
| 8 | முதல் | | | 1,00,000 |
| | **மொத்தம்** | | **3,75,000** | **3,75,000** |

**4. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கிக் கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

**தீர்வு:**

**இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | வங்கிக்கடன் | | | 2,00,000 |
| 2 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 1,00,000 |
| 3 | சரக்கிருப்பு | | 70,000 | |
| 4 | முதல் | | | 2,50,000 |
| 5 | கொள்முதல் | | 1,80,000 | |
| 6 | விற்பனை | | | 3,00,000 |
| 7 | கடனாளிகள் | | 4,00,000 | |
| 8 | வங்கி | | 2,00,000 | |
| | **மொத்தம்** | | **8,50,000** | **8,50,000** |

**5. சந்திரமோகன்என்பவரதுஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரியஇருப்பாய்வு தயார் செய்க.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,24,500 | வங்கி மேல்வரைப்பற்று | 5,800 |
| எடுப்புகள் | 2,000 | மகிழ்வுந்து | 20,000 |
| பெற்ற கடன் | 7,000 | பொதுச் செலவுகள் | 2,500 |
| விற்பனை | 53,400 | கட்டடம் | 1,10,000 |
| கொள்முதல் | 40,000 | சரக்கிருப்பு | 16,200 |

**தீர்வு:**

**சந்திரமோகன் ஏடுகளில் 31.3.2017 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 1,24,500 |
| 2 | எடுப்புகள் | | 2,000 | |
| 3 | பெற்ற கடன் | | | 7,000 |
| 4 | விற்பனை | | | 53,400 |
| 5 | கொள்முதல் | | 40,000 | |
| 6 | வங்கி மேல்வரைப்பற்று | | | 5,800 |
| 7 | மகிழ்வுந்து | | 20,000 | |
| 8 | பொதுச் செலவுகள் | | 2,500 | |
| 9 | கட்டடம் | | 1,10,000 | |
| 10 | சரக்கிருப்பு | | 16,200 | |
| | **மொத்தம்** | | **1,90,700** | **1,90,700** |

**6. பாபு என்பவரதுஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2016 ஆம் நாளுக்குரியஇருப்பாய்வுதயாரிக்கவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 7,000 | பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச்சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

**தீர்வு:**

**பாபுவின் ஏடுகளில் 31.3.2016 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | கைரொக்கம் | | 7,000 | |
| 2 | பற்பல கடனாளிகள் | | 5,400 | |
| 3 | சம்பளம் | | 6,800 | |
| 4 | வாராக்கடன் | | 200 | |
| 5 | தொடக்கச் சரக்கிருப்பு | | 15,400 | |
| 6 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 7,000 | |
| 7 | பற்பல கடனீந்தோர் | | | 11,800 |
| 8 | முதல் | | | 25,000 |
| 9 | கொள்முதல் | | 45,000 | |
| 10 | விற்பனை | | | 50,000 |
| | **மொத்தம்** | | **86,800** | **86,800** |

**7. ராஜேஷ் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 13,000 | எடுப்புகள் | 7,000 |
| வங்கிக் கட்டணம் | 750 | பற்பல கடனாளிகள் | 17,100 |
| பயணச்செலவுகள் | 350 | செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 12,000 |
| பெற்றத் தள்ளுபடி | 1,300 | முதல் | 25,900 |
| கையிருப்பு ரொக்கம் | 1,000 | | |

**தீர்வு:**

**ராஜேஷ் ஏடுகளில் 31.3.2017 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ. எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 13,000 | |
| 2 | வங்கி கட்டணம் | | 750 | |
| 3 | பயணச் செலவுகள் | | 350 | |
| 4 | பெற்றத் தள்ளுபடி | | | 1,300 |
| 5 | கையிருப்பு ரொக்கம் | | 1,000 | |
| 6 | எடுப்புகள் | | 7,000 | |
| 7 | பற்பல கடனாளிகள் | | 17,100 | |
| 8 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | | 12,000 |
| 9 | முதல் | | | 25,900 |
| | **மொத்தம்** | | **39,200** | **39,200** |

**8. ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31.12.2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வுதயாரிக்கவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,50,000 | விற்பனை | 75,000 |
| கடனாளிகள் | 22,800 | விற்பனைத் திருப்பம் | 1,000 |
| பெற்ற வாடகை | 500 | அளித்த தள்ளுபடி | 800 |
| வங்கி மேல்வரைப்பற்று | 3,100 | பெற்றத் தள்ளுபடி | 1,000 |
| கடனீந்தோர் | 5,500 | கூலி | 2,900 |
| வளாகம் | 1,46,000 | சம்பளம் | 3,500 |
| தொடக்கச்சரக்கிருப்பு | 10,000 | கழிவு கொடுத்தது | 1,100 |
| கொள்முதல் | 45,000 | பொதுச் செலவுகள் | 2,000 |

**தீர்வு:**

**ரவிச்சந்திரன் ஏடுகளில் 31.3.2016 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 1,50,000 |
| 2 | கடனாளிகள் | | 22,800 | |
| 3 | பெற்ற வாடகை | | | 500 |
| 4 | வங்கி மேல்வரைப்பற்று | | | 3,100 |
| 5 | கடனீந்தோர் | | | 5,500 |
| 6 | வளாகம் | | 1,46,000 | |
| 7 | தொடக்கச் சரக்கிருப்பு | | 10,000 | |
| 8 | கொள்முதல் | | 45,000 | |
| 9 | விற்பனை | | | 75,000 |
| 10 | விற்பனைத் திருப்பம் | | 1,000 | |
| 11 | அளித்த தள்ளுபடி | | 800 | |
| 12 | பெற்றத் தள்ளுபடி | | | 1,000 |
| 13 | கூலி | | 2,900 | |
| 14 | சம்பளம் | | 3,500 | |
| 15 | கழிவு கொடுத்தது | | 1,100 | |
| 16 | பொதுச் செலவுகள் | | 2,000 | |
| | **மொத்தம்** | | **2,35,100** | **2,35,100** |

**9. பின்வரும் இருப்புகள் பாஸ்கர் என்பவரது ஏடுகளிலிருந்து 31.3.2017 அன்று எடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து அவருடைய இருப்பாய்வு தயாரிக்கவும். இருப்பாய்வு சமன்படாவிட்டால் வேறுபாட்டினை அனாமத்துக் கணக்கிற்கு மாற்றவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச்சரக்கிருப்பு | 40,000 | கடனாளிகள் | 25,000 |
| முதல் | 90,000 | உள்தூக்குக் கூலி | 16,500 |
| விற்பனை | 1,77,200 | பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 20,000 |
| சம்பளம் | 12,000 | கழிவுப் பெற்றது | 5,550 |
| செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 9,450 | வங்கி ரொக்கம் | 17,000 |
| தொலைபேசிக் கட்டணம் | 2,350 | அறைகலன் | 19,000 |
| கடனீந்தோர் | 16,000 | பொறி இயந்திரம் | 55,800 |
| கொள்முதல் | 85,000 | பழுதுபார்ப்புச் செலவு | 550 |

**தீர்வு:**

**பாஸ்கர் ஏடுகளில் 31.3.2017 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே. ப.எ | பற்று இருப்பு ₹ | வரவு இருப்பு ₹ |
|---|---|---|---|---|
| 1 | தொடக்கச் சரக்கிருப்பு | | 40,000 | |
| 2 | முதல் | | | 90,000 |
| 3 | விற்பனை | | | 1,77,200 |
| 4 | சம்பளம் | | 12,000 | |
| 5 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | | 9,450 |
| 6 | தொலைபேசிக் கட்டணம் | | 2,350 | |
| 7 | கடனீந்தோர் | | | 16,000 |
| 8 | கொள்முதல் | | 85,000 | |
| 9 | கடனாளிகள் | | 25,000 | |
| 10 | உள்தூக்கு கூலி | | 16,500 | |
| 11 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 20,000 | |
| 12 | கழிவு பெற்றது | | | 5,550 |
| 13 | வங்கி ரொக்கம் | | 17,000 | |
| 14 | அறைகலன் | | 19,000 | |
| 15 | பொறி இயந்திரம் | | 55,800 | |
| 16 | பழுதுபார்ப்பு செலவுகள் | | 550 | |
| | **அனாமத்து கணக்கு (வேறுபாடு)** | | **5,000** | |
| | **மொத்தம்** | | **2,98,200** | **2,98,200** |

**10.** **பின்வரும் இருப்பாய்வினை சரி செய்யவும்.**

| விவரம் | பற்று இருப்பு ₹ | வரவு இருப்பு ₹ |
|---|---|---|
| தொடக்கச்சரக்கிருப்பு | 1,00,000 | |
| சம்பளம் | 36,000 | |
| கடனீந்தோர் | 1,32,000 | |
| வங்கி | 35,000 | |
| உள் ஏற்றிச் செல் செலவு | 18,000 | |
| பெற்ற வாடகை | 9,000 | |
| அளித்த தள்ளுபடி | 6,000 | |
| கொள்முதல் | 3,48,000 | |
| செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 60,000 | |
| கடனாளிகள் | | 45,000 |
| வெளித்தூக்குக் கூலி | | 15,000 |
| முதல் | | 1,63,000 |
| உள் திருப்பம் | | 9,000 |
| பெற்ற தள்ளுபடி | | 12,000 |
| வியாபாரச்செலவுகள் | | 18,000 |
| விற்பனை | | 3,68,000 |
| கட்டடம் | | 1,14,000 |
| **மொத்தம்** | **7,44,000** | **7,44,000** |

**தீர்வு:**

**------------ ஏடுகளில் ------- ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எ | பற்று இருப்பு₹ | வரவு இருப்பு₹ |
|---|---|---|---|---|
| 1 | தொடக்கச் சரக்கிருப்பு | | 1,00,000 | |
| 2 | சம்பளம் | | 36,000 | |
| 3 | கடனீந்தோர் | | | 1,32,000 |
| 4 | வங்கி | | 35,000 | |
| 5 | உள் ஏற்றிச்செல் செலவு | | 18,000 | |
| 6 | பெற்ற வாடகை | | | 9,000 |
| 7 | அளித்த தள்ளுபடி | | 6,000 | |
| 8 | கொள்முதல் | | 3,48,000 | |
| 9 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | | 60,000 |
| 10 | கடனாளிகள் | | 45,000 | |
| 11 | வெளித்தூக்கு கூலி | | 15,000 | |
| 12 | முதல் | | | 1,63,000 |
| 13 | உள்திருப்பம் | | 9,000 | |
| 14 | பெற்ற தள்ளுபடி | | | 12,000 |
| 15 | வியாபார செலவுகள் | | 18,000 | |
| 16 | விற்பனை | | | 3,68,000 |
| 17 | கட்டடம் | | 1,14,000 | |
| | **மொத்தம்** | | **7,44,000** | **7,44,000** |

**11. பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்களை விற்பனைச் செய்யும் சுபஸ்ரீ மின்பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.**

**2017**

ஏப்ரல் 5 கார்த்திக் மின் பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது.
10 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று ₹ 2,500 வீதம்
5 மின்சாரஅடுப்புகள் ஒன்று ₹ 2,000 வீதம்

ஏப்ரல் 19 கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ₹ 6,000 வீதம்

ஏப்ரல் 25 போலார் மின் பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது 10 மின் விசிறிகள் ஒன்று ₹ 2,000 வீதம்

ஏப்ரல் 29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது.
10 மின்சார அடுப்புகள் ஒன்று ₹ 3,000 வீதம்

**தீர்வு:**

**சுபஸ்ரீ மின் பொருள் நிறுவனத்தின் ஏடுகளில்**

**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | இ. எ | பே. ப.எ | தொகை ₹ விளக்கம் | தொகை ₹ மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 5 | **<u>கார்த்திக் மின் பொருள் நிறுவனம்,</u>**<br>10 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று₹2,500வீதம்<br>5 மின்சார அடுப்புகள் ஒன்று ₹ 2,000 வீதம் | | | 25,000<br>10,000 | 35,000 |
| 19 | **<u>கேதான் மின் பொருளகம்:</u>**<br>3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ₹ 6,000 வீதம் | | | | 18,000 |
| 25 | **<u>போலார் மின் பொருள் விற்பனையகம்</u>**<br>10 மின் விசிறிகள் ஒன்று ₹ 2,000 வீதம் | | | | 20,000 |
| | **கொள்முதல் க/கு ப** | | | | **73,000** |

**12. பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.**

2017

ஜனவரி 1 அன்புவிற்கு கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ₹ 150 வீதம் 20 ரீம்கள் வெள்ளைத்தாள்.

ஜனவரி 2 ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ₹360 வீதம் 6டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது.

ஜனவரி 10 பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ₹ 620.

ஜனவரி 15 இளங்கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ₹ 170 வீதம் 10 ஓவிய அட்டைகள்

ஜனவரி 20 கனி விற்பனையகத்திற்கு ஒன்று ₹ 1,520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது.

**தீர்வு:**

**இராம் நிறுவனத்தின் ஏடுகளில்**
**விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | இ. எ | பே.ப. எ | தொகை ₹ விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஜன. 1 | **அன்பு;** 20 ரீம்கள்வெள்ளைத்தாள் ரீம் ஒன்று ₹150 வீதம் | | | | 3,000 |
| 2 | **ஜெகதீஷ் நிறுவனம்:** 6 டஜன் எழுதுகோல் ஒரு டஜன் ₹ 360 வீதம் | | | | 2,160 |
| 15 | **இளங்கோ:** 10 ஓவிய அட்டைகள் ஒரு அட்டை ₹ 170 வீதம் | | | | 1,700 |
| | **விற்பனை க/கு** வ | | | | **6,860** |

**13. 2017, மே மாதத்திற்கான சேஷாத்ரி அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.**

| மே | | ₹ |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 18 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டிப் பெற்றது | 500 |

**தீர்வு:**

**சேஷாத்ரி என்பவரின் ஏடுகளில்**

**ப தனிப்பத்தி ரொக்க ஏடு வ**

| நாள் | பெறுதல்கள் | பே.ப. எ | தொகை ₹ | நாள் | செலுத்தல்கள் | பே. ப.எ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2017,1 | இருப்பு கீ/கொ | | 40,000 | 2017, 7 | கூலி க/கு | | 2,000 |
| மே 5 | ஸ்வாதி க/கு | | 4,000 | மே.10 | கொள்முதல்க/கு | | 6,000 |
| 15 | விற்பனை க/கு | | 9,000 | 18 | கணிப்பொறிக/கு | | 15,000 |
| 30 | பெ.வட்டி க/கு | | 500 | 22 | சபாபதி க/கு | | 5,000 |
| | | | | 28 | சம்பளம் க/கு | | 2,500 |
| | | | | 31 | இருப்பு கீ/இ | | **23,000** |
| | | | 53,500 | | | | 53,500 |
| ஜீன். 1 | **இருப்பு கீ/கொ** | | **23,000** | | | | |

**14. இராமலிங்கம் என்பவரின் 2017 ஜுலை மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டைத்தயாரிக்கவும்.**

| 2017 ஜுலை | | | ₹ |
|---|---|---|---|
| | 1 | கை ரொக்கம் | 32,000 |
| | 5 | கீர்த்தனாவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 5,000 |
| | 6 | கட்டுமச்செலவுக்காக பணம் கொடுத்தது | 300 |
| | 7 | ரொக்கக் கொள்முதல் | 12,400 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 2,600 |
| | 10 | மேலாளருக்கு சம்பளம் ரொக்கமாகத் தரப்பட்டது | 7,000 |
| | 11 | பாலாஎன்பவருக்கு ரொக்கம் கொடுத்தது | 3,000 |
| | 12 | போஸ் என்பவரிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 2,500 |
| | 24 | பணம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கிக்கு செலுத்திய ரொக்கம் | 4,000 |
| | 27 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| | 31 | அலுவலக வாடகை ரொக்கமாகச் செலுத்தியது | 6,000 |

**தீர்வு:**

**இராமலிங்கம் என்பவரின் ஏடுகளில்**

ப **தனிப்பத்தி ரொக்க ஏடு** வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப.எ | தொகை ₹ | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2017,1 | இருப்பு கீ/கொ | | 32,000 | 2017, 6 | கட்டும செலவு க/கு | | 300 |
| ஜீலை 5 | கீர்த்தனா க/கு | | 5,000 | ஜீலை.7 | கொள்முதல்க/கு | | 12,400 |
| 8 | விற்பனை க/கு | | 2,600 | 10 | சம்பளம் க/கு | | 7,000 |
| 30 | வங்கி க/கு | | 2,000 | 11 | பாலா க/கு | | 3,000 |
| | | | | 24 | வங்கி க/கு | | 4,000 |
| | | | | 31 | அ. வாடகை க/கு | | 6,000 |
| | | | | 31 | இருப்பு கீ/இ | | **8,900** |
| | | | 41,600 | | | | 41,600 |
| ஆக. 1 | **இருப்பு கீ/கொ** | | **8,900** | | | | |

**15. பின்வரும் தகவல்களிலிருந்து முன் பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.**

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஜன | 1 | சில்லறைச்செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது | 500 |
| | 2 | பயணச்செலவுக்கு கொடுத்தது | 5 |
| | | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| | 3 | தபால் செலவு செய்தது | 15 |
| | | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| | 4 | எழுது பொருள் வாங்கியது | 134 |
| | | போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது | 18 |
| | 5 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| | | பேருந்துக் கட்டணம் செலுத்தியது | 11 |
| | | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 24 |

**தீர்வு:**

ப **பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு** வ

| பெற்ற தொகை ₹ | ரொ.ஏ.ப.எ | நாள் | விவரம் | சா.சீ.எ | மொத்தம் செலவழித்த தொகை₹ | பயணச் செலவுகள் ₹ | வண்டிக் கட்டணம்₹ | அஞ்சல் செலவுகள்₹ | கூலி₹ | எழுது பொருள்₹ | பல்வகை செலவுகள்₹ | பே.ப.எ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 500 | | 2017, 1 | ரொக்கம் | | | | | | | | | |
| | | ஜன. 2 | பயணச் செலவு | | 5 | 5 | | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 12 | | 12 | | | | | |
| | | 3 | அஞ்சல் செலவுகள் | | 15 | | | 15 | | | | |
| | | | கூலி | | 66 | | | | 66 | | | |
| | | 4 | எழுதுபொருள் | | 134 | | | | | 134 | | |
| | | | போக்குவரத்துசெலவு | | 18 | 18 | | | | | | |
| | | 5 | பழுதுபார்ப்பு செலவு | | 65 | | | | | | 65 | |
| | | | பயணச் செலவுகள் | | 11 | 11 | | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 24 | | 24 | | | | | |
| | | 5 | மொத்த செலவுகள் | | 350 | 34 | 36 | 15 | 66 | 134 | 65 | |
| | | ஜன.6 | இருப்பு கீ/இ | | **150** | | | | | | | |
| 500 | | | | | 500 | | | | | | | |
| **150** | | 6 | இருப்பு கீ/கொ | | | | | | | | | |
| **350** | | | ரொக்க க/கு | | | | | | | | | |

**16.** **கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத்தயாரிக்கவும்.**

| **2017 ஜுலை** | | ₹ |
|---|---|---|
| 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 8 | வெள்ளைத்தாள்கள் வாங்கியது | 50 |
| 10 | ஆட்டோ கட்டணம் கொடுத்தது | 200 |
| 15 | கூலி கொடுத்தது | 300 |
| 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |
| 21 | எழுது பொருள்கள் வாங்கியது | 450 |
| 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| 27 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| 31 | ஏற்றிச் செல் செலவுகள் செய்தது | 150 |

**தீர்வு:**

ப பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு வ

| பெற்ற தொகை ₹ | ரொ.ஏ.ப.எ | நாள் | விவரம் | சா.சீ.எ | மொத்தம் செலவழித்த தொகை₹ | அஞ்சல் செலவுகள்₹ | ஆட்டோ கட்டணம்₹ | கூலி₹ | அச்சு எழுது பொருள்₹ | ஏற்றி செல் செலவு | பல்வகை செலவுகள் ₹ | பே.ப.எ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2,000 | | 2017, 1 | ரொக்கம் | | | | | | | | | |
| | | ஜீலை.7 | மடல் ஏடு (ம) பதிவேடு | | 100 | | | | 100 | | | |
| | | 8 | வெள்ளைத்தாள் | | 50 | | | | 50 | | | |
| | | 10 | ஆட்டோ கட்டணம் | | 200 | | 200 | | | | | |
| | | 15 | கூலி | | 300 | | | 300 | | | | |
| | | 18 | தபால் செலவுகள் | | 100 | 100 | | | | | | |
| | | 21 | எழுதுபொருள் | | 450 | | | | 450 | | | |
| | | 23 | தேநீர் செலவுகள் | | 60 | | | | | | 60 | |
| | | 25 | துரித அஞ்சல் செலவு | | 150 | 150 | | | | | | |
| | | 27 | சிற்றுண்டிசெலவு | | 250 | | | | | | 250 | |
| | | 31 | ஏற்றிச்செல் செலவு | | 150 | | | | | 150 | | |
| | | | மொத்த செலவுகள் | | **1,810** | 250 | 200 | 300 | 600 | 150 | 310 | |
| | | 31 | **இருப்பு கீ/இ** | | **190** | | | | | | | |
| 2,000 | | ஆக | | | 2,000 | | | | | | | |
| **190** | | 1 | **இருப்பு கீ/கொ** | | | | | | | | | |
| 1,810 | | 1 | ரொக்க க/கு | | | | | | | | | |

**17. பின்வரும் நடவடிக்கைகளை முதலினம், மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.**

i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ₹ 75,000.

ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹ 2,50,000.

iii) முதலீடு விற்பனைச் செய்தது ₹ 1,20,000.

iv) கழிவுப் பெற்றது ₹ 30,000.

v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹ 1,400.

**தீர்வு:**

i) வருவாயின வரவு ii) முதலின வரவு iii) முதலின வரவு

iv) வருவாயின வரவு v) முதலின செலவு

**18. கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.**

i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹ 10,000.

ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹ 5,000.

iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹ 2,000.

iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹ 3,000.

v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹ 12,000.

**தீர்வு:**

i) வருவாயின செலவு ii) வருவாயின செலவு iii) வருவாயின செலவு

iv) முதலின செலவு v) வருவாயின செலவு